International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 04 October to December 2025 www.irjtsjournal.org

# முஸ்லிம் பெண்தாதியர்கள் பணிச்சூழலில் எதிர்நோக்கும் சவால்கள்: சம்மாந்துறைப் பிரதேசத்தைமையப்படுத்தியஓர்ஆய்வு

[1]எஸ். பாத்திமாநுஸைரா, [2]எம்.எல். முஹம்மட்ஹெல்பான், [3]ஏ.எல்.எம். முஜாஹித்

[1] இளநிலைமாணவர், இலங்கைதிறந்தபல்கலைக்கழகம்

[2] விரிவுரையாளர், இஸ்லாமியகற்கைகள்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை,

[3] சிரேஷ்டவிரிவுரையாளர், இஸ்லாமியகற்கைகள்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

**Challenges Faced by Muslim Women Nurses in the Workplace: A Study Focusing on the Sammanthurai Region**

[1]S.Fathima Nusaira, [2]M.L.Mohamed Helfan, [3]A.L.M.Mujahid

**ஆய்வுச்சுருக்கம்**

**இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைப்பிரதேசமானது குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் பெண்தாதியர்களை சுகாதாரத்துறைக்கு வழங்கும் ஒரு முக்கிய பிரதேசமாகக்காணப் படுகின்றது. இப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்தாதியர்கள் தமது தொழில்சார் சூழலிலும் சமூக மற்றும் குடும்பவாழ்விலும் எதிர் நோக்கும் பன்முகப்படுத்தப் பட்டசவால்களை விரிவாக ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாய் வானது பண்புசார் மற்றும் அளவுசார் (Mixed Method Research) அணுகு முறைகளை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக எழு மாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 30 பெண்தாதியர்களுக்கு வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்ட தோடு, ஆழமான புரிதலுக்காக 10 தாதியர்களிடம் நேர்காணல்களும் மேற்கொள்ளப்பட்டன. சேகரிக்கப்பட்டதரவுகள் *Excel* மென்பொருள் உதவியுடனும், பண்புசார்தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic Analysis) முறையினூடாகவும் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வின் பிரதானகண்டறிதல்களின் படி, முஸ்லிம் பெண்தாதியர்கள் தமது பணிநிலையங்களில் இஸ்லாமியவரையறைகளுக்குட்பட்ட முழுமையான ஆடை முறையைப்பின்பற்றுவதில் பாரியதடைகளை எதிர் நோக்குகின்றனர். இது அவர்களதுதனிப்பட்டமன உளைச்சலுக்குக் காரணமாக அமைவதுடன், சமூகரீதியான எதிர்மறைவிமர்சனங்களுக்கும் உள்ளாக்குகின்றது. மேலும், சுழற்சி முறையிலான இரவு நேரப்பணிகள் அவர்களது குடும்ப வாழ்வியலில் பாரியதாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, கணவன் மற்றும் பிள்ளைகளுடன் செலவழிக்க வேண்டிய நேரத்தைக் குறைத்துள்ள தோடு, பிள்ளைகளின் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டில் போதியகவனம் செலுத்த முடியாமையையும் தோற்று வித்துள்ளது. தொழில்ரீதியாக, பண்டிகைக்கால மற்றும் அவசரகால விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள நிர்வாகச்சிக்கல்கள், சுகயீனமான நிலையிலும் சேவையாற்ற வேண்டிய கட்டாயச் சூழல் மற்றும் பணிச்சுமையால் அடிப்படை மார்க்கக்கடமைகளை உரிய நேரத்தில் நிறை வேற்ற முடியாமை போன்ற விடயங்கள் இவர்களது பணித்திருப்தியைப் பாதிக்கும் காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தமாக, சம்மாந்துறைபிரதேச முஸ்லிம் பெண்தாதியர்கள் தமது மார்க்கவிழுமியங்களுக்கும் தொழில்சார் பொறுப்புகளுக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேணுவதில் பெரும் போராட்டத்தை எதிர் கொள்கின்றனர் என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகின்றது.**

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2025, IRJTSR

**திறவுச்சொற்கள்: முஸ்லிம் பெண்தாதியர்கள், சுகாதாரத்துறை, தொழில்முறைசவால்கள், மதக்கடமைகள், பணித்திருப்தி, சம்மாந்துறை**

**அறிமுகம்**

உலகில் மனிதன் பல்வேறு தேவைகளுக்கு மத்தியில் படைக்கப் பட்டுள்ளான். மனிதனின் அடிப்படை தேவைகளாக அடையாளம் காணப்படும் உணவு, உடை, உறையுள் என்பவற்றைத் தாண்டி, சுகாதார சேவை இன்றைய சூழலில் ஒரு அத்தியாவசியத் தேவையாக உருவெடுத்துள்ளது. இச்சேவை பண்டையகாலம் முதல் இன்று வரை பல்வேறு வடிவங்களில் மனித சமூகத்தில் இடம் பெற்று வந்துள்ளது. ஆரம்பகாலங்களில் மனிதர்கள் இயற்கையாகக்கிடைக்கும் மூலிகைகள் மற்றும் பாரம்பரிய அறிவுகளை அடிப்படையாகக் கொண்டு முறிவுவைத்தியம், சித்த வைத்தியம், குழந்தை பிரசவசிகிச்சை போன்ற மருத்துவ நடைமுறைகளை பெரும்பாலும் வீடுகளிலேயே மேற்கொண்டனர். இவ்வைத்திய முறைகள் அனுபவ அறிவு மற்றும் மரபு வழிகற்றலின் அடிப்படையில் செயல்பட்ட வையாகக் காணப்பட்டன.

எனினும், நவீனத்துவத்தின் வளர்ச்சியுடன் கூடிய அறிவியல் முன்னேற்றங்கள் சுகாதாரத்துறையின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்த தோடு, அதனை நிறுவனமயப் படுத்தப்பட்ட அமைப்பாக மாற்றியமைத்துள்ளன. இன்றையநிலையில், சுகாதாரத்துறை அரசின் முழுமையான ஆதரவுடன் செயல்படும் ஒரு முக்கியமான பொதுச் சேவையாகவிளங்குகிறது. இத்துறையின் வளர்ச்சிக்கும் செயல்பாடுகளுக்கும் பல்வேறு பங்காளிகள் முக்கிய பங்களிப்புகளை வழங்குகின்றனர். குறிப்பாகவைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஆகியோர் சுகாதார சேவையின் அடித்தளமாக செயல் படுகின்றனர். இத்துறையில் வைத்தியர்களின் மருத்துவப் பங்களிப்புகளுக்கு இணையாகவும், சில சந்தர்ப்பங்களில் அதற்கு நிகராகவும் தாதியர்களின் சேவைகள் நோயாளிபராமரிப்பு மற்றும் சிகிச்சைசெயல் முறைகளில் அத்தியாவசியமானதாக அமைந்துள்ளன. ஆகவே, சுகாதாரத்துறையின் முழுமையான செயல் திறனை உறுதிப்படுத்துவதில் தாதியர்களின் பங்குதவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதப்படுகிறது.

"தாதியம்" என்பதற்கு பல வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்ட போதிலும் 1973ம் ஆண்டு வேர்ஜீனியாஹெண்டர்ஸன் என்பவரால் வழங்கப்பட்ட வரை விலக்கணத்தையே சர்வதேசதாதியர்சபை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் படிதனிப்பட்ட ஒருவருடைய சுகத்தைப்பேணி அதை உயர்வடையச் செய்யவும், நோய்கள்வராமல் பாதுகாக்கவும், நோய்வந்த போது அதிலிருந்து குணம் பெறவும் சிகிச்சையின் பின்னர் மீண்டும் பழைய நிலையைப்பேணவும் சுகாதாரக்கல்வியை ஊட்டவும் நோய்நிலைகுணமடையாவிடத்து சமாதானமான மரணத்தை எய்தவும் அதற்குரிய வழிவகைகளைகையாண்டு நடை முறைப்படுத்துவ தேதாதியம் எனப்படும்". மேலும் தாதியமானது தனிப்பட்ட ஒருவருக்கோ, குடும்பத்துக்கோ அல்லது சமுதாயத்திற்கோ செய்யும் ஒரு சேவையாகும். இது ஒருவர் உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப்படும் போது அவருடைய தேவைகளைப்பூர்த்தி செய்து பராமரித்தல் என்றும் பொருள்படும்" (Riyas, 2016). "19ஆம் நூற்றாண்டின் ஆங்கில மருத்துவத்துறையின் வளர்ச்சிக்காலகட்டத்தில் தாதியர்களின் அவசியம் உணரப்பட்ட தோடு, ஜேர்மனியில் தாதிமார்களுக்கான முறையான பயிற்சியும் வழங்கப்பட்டது. பின்னர் கிரிமியாயுத்தத்தின் போது பிரிட்டனில் ஃப்ளோரன்ஸ்நைட்டிகேர்ள் முயற்சியினால் இராணுவமருத்துவமனைகளில் தாதியர்பணிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று வழிகாட்டப்பட்டது. இத்துறைக்கான பங்களிப்புக்களில் பெண்தாதியர்களின் சேவையும் இன்றியமையாததாகும்.

அறிமுகம்இல்லாதநோயாளிகளிடமிருந்துவரும்அசௌகரியங்கள்மற்றும்சங்கடங்களைபொறுத்துக்கொண்டுஅவர்க


© 2025, IRJTSR

ளைஅன்பாகப்பராமரிக்கும்பணியைமேற்கொண்டுவருகிறார்கள். பெண்நோயாளர்களுக்கானசிகிச்சைவழங்குவதில்இவர்களின்தேவைமேலும்உணரப்பட்டது(Punyameen, 2009).

இஸ்லாமியவரலாற்றிலும்பெண்தாதியர்களின் சேவைகள்காணப்பட்டன. தாதியர்தொழில்இஸ்லாத்தில்அங்கீகரிக்கப்பட்டதற்குஆதாரமாகநபி (ஸல்) அவர்களதுகாலத்தில்வாழ்ந்தஸஹாபிபெண்கள்கூடநபி (ஸல்) அவர்களுக்குபலஇடங்களில்மருத்துவசேவையைவழங்கியதைக் கூறலாம். அதாவது "இஸ்லாமியவரலாற்றில்போர்க்களங்களில்பெண்கள்பலபணிகளைஆற்றியுள்ளனர். இவற்றில்காயப்பட்டவர்களுக்குநீர்புகட்டுவதும், காயங்களுக்குசிகிச்சைஅளிப்பதுமேஅப்போதையமுதல்தரபணியாகவிளங்கின. இந்தவகையில்ருபைதாஅல்அஸ்லமிய்யாஎன்றசஹாபிபெண்இஸ்லாமி வரலாற்றில்முதலாவதுதாதியாககருதப்படுகின்றார். இப்பெண்ணுக்குஇறைதூதர்முஹம்மத் (ஸல்) அவர்கள்கந்தக்யுத்தத்தில்காயப்பட்டவர்களுக்குசிகிச்சைஅளிப்பதற்கானஏற்பாடுகளைசெய்துகொடுத்திருந்தார்கள். இத்தாதிக்குத்துணையாகபெண்கள்குழுஒன்றும்பணியில்ஈடுபடுத்தப்பட்டது"(Suhaima at el., 2022).

இலங்கைபல்லினசமூகக்கட்டமைப்பைக்கொண்டநாடுஎன்றவகையில்பெண்தாதியர்களின்பங்களிப்புக்களும்அதிகளவில்இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாகமுஸ்லிம்பெண்தாதியர்களும்இத்துறையில்தங்களின்பங்களிப்பைவழங்கிவருவதுசிறப்பம்சமாகும். சுகாதாரசேவையின்அங்கமாகக்காணப்படுகின்றதாதியர்கள்தாங்கள்சேவையாற்றுகின்றசுகாதாரசேவைநிலையங்களில்பல்வேறுசவால்களுக்குஉள்ளாவதைக்காணமுடிகின்றது. குறிப்பாகமுஸ்லிம்பெண்தாதியர்களும்இதற்குவிதிவிலக்கானவர்கள்அல்லர். தாங்கள்சேவையாற்றும்இடங்களில்உடல், உளரீதியாகபல்வேறுபிரச்சினைகளைஎதிர்நோக்குவதோடுகலாசாரபாதிப்புக்களுக்கும்உள்ளாகிவருவதைகாணமுடிகின்றது(Indeed, Editorial team, 2023).

இப்பின்னணியில்இலங்கையின்கிழக்குமாகாணத்தின்அம்பாரைமாவட்டத்தில்காணப்படும்கிராமமேசம்மாந்துறையாகும். முஸ்லிம்கள்செறிந்துவாழும்இக்கிராமத்தில்காணப்படும்சுகாதாரசேவைநிலையங்களில்முஸ்லிம்பெண்தாதியர்களும்சேவையாற்றிவருவதனால்இச்சேவைநிலையங்களில்அவர்கள்எதிர்கொள்ளும்பிரச்சினைகளைஅடையாளம்கண்டுவிபரிப்பதோடு, அதற்கானகாரணங்கள்மற்றும்தீர்வுகளைமுன்மொழியும்நோக்கில்இவ்வாய்வுஅமையவல்லது.

**ஆய்வுப்பிரச்சினை**

சம்மாந்துறைப்பிரதேசத்தில்அமைந்துள்ளசுகாதாரசேவைநிலையங்களில்கடமையாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்களின்வாழ்வியல்அம்சங்களில்எதிர்பார்க்கப்படும்விடயங்களை முழுமையாக அடையமுடியவில்லை.தொழில்சார்அழுத்தங்கள், குடும்பப்பொறுப்புகள், சமூகஎதிர்பார்ப்புகள்மற்றும்பணியிடச்சூழல்போன்றகாரணிகளின்தாக்கம்அவர்களின்உடல், உளமற்றும்சமூகஆரோக்கியத்தில்எதிர்மறையானவிளைவுகளைஏற்படுத்தியுள்ளது. இதன்விளைவாக, இப்பெண்தாதியர்களின்வாழ்வில்மனஅழுத்தம்மற்றும்தளம்பல்நிலைஅதிகரித்துவருவதுஒருமுக்கியமானசமூக-சுகாதாரப்பிரச்சினையாகஉருவெடுத்துள்ளது. இந்நிலைமை, அவர்களின்தனிப்பட்டவாழ்வையும்தொழில்முறைசெயல்திறனையும்பாதிப்பதோடு, மொத்தசுகாதாரசேவையின்தரத்திலும்தாக்கத்தைஏற்படுத்தக்கூடியதாகும்.

**ஆய்வின்நோக்கம்**

சம்மாந்துறைப்பிரதேசத்தில்உள்ளசுகாதாரசேவைநிலையங்களில்கடமையாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்கள்தங்கள் தொழில்சார்மற்றும்சமூகவாழ்வில்குறிப்பாக, பணியிடச்சூழல், பணிநேரஒழுங்கமைப்பு, குடும்பமற்றும்சமூகப்பொறுப்புகள், மதமற்றும்பண்பாட்டுகட்டுப்பாடுகள்ஆகியவைஅவர்களின்வாழ்வியல்நிலைமற்றும்தொழில்முறைசெயல்திறன்மீதுஏற்படுத்தும்தாக்கங்களைஆராய்வதேஇவ்வாய்வின்நோக்கமாகும்.

**ஆய்வின்முக்கியத்துவம்**

முஸ்லிம்பெண்தாதியர்களின்சுகாதாரப்பணிசமுதாயநலனுக்குத்தவிர்க்கமுடியாதஒருஅத்தியாவசியசேவையாகும். இஸ்லாமியக்கண்ணோட்டத்தில், மருத்துவசேவைஒருமகத்தானஅறப்பணியாகவும், சமூகக்கடமையாகியபர்ள்கிபாயாவாகவும்கருதப்படுகிறது. எனவே, இத்துறையில்பெண்களின்பங்களிப்புசமுதாயத்தின்முழுமையானநலனைஉறுதிப்படுத்துவதில்முக்கியபங்குவகிக்கிறது. இலங்கைபோன்றசிறுபான்மைச்சமூகச்சூழலில், குறிப்பாகசம்மாந்துறைப்பிரதேசத்தில், குடும்பப்பொறுப்புகளுடன்இணைந்துசுகாதாரத்துறையில்பணியாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்கள்பல்வேறுசமூக, பண்பாட்டு, மதமற்றும்தொழில்சார்சவால்களைஎதிர்கொள்வதுகவனிக்கத்தக்கதாகஉள்ளது. இச்சவால்கள்அவர்களின்தொழில்முறைநிலைத்தன்மைமற்றும்சேவைத்தொடர்ச்சியைபாதிக்கும்நிலையையும்உருவாக்குகின்றன. இவ்வாய்வு, இவ்வகைச்சவால்களைமுறையாகஅடையாளம்காண்பதன்மூலம், அவற்றுக்கானநடைமுறைசார்மற்றும்பண்பாட்டுக்கேற்றதீர்வுகளைமுன்வைக்கஉதவும். இதன்மூலம், முஸ்லிம்பெண்தாதியர்கள்சுகாதாரத்துறையில்தொடர்ச்சியாகவும்திறம்படவும்பங்களிப்பைவழங்குவதற்குஏற்றசூழல்உருவாகும். ஆகவே, சம்மாந்துறைபிரதேசத்தில்முஸ்லிம்பெண்தாதியர்களின்சுகாதாரத்துறைக்கானபங்களிப்பைவலுப்படுத்துவதில்இவ்வாய்வுமுக்கியமானஅறிவியல்மற்றும்சமூகப்பயனுடையதாகவிளங்குகிறது.

**இலக்கியமீளாய்வு**

இவ்வாய்வுத்தலைப்புடன்தொடர்புடையஆய்வுகள்தேசியமற்றும்சர்வதேசநிலைகளில்பல்வேறுஆராய்ச்சியாளர்களால்மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகள்சுகாதாரத்துறை, தாதியர்தொழில்சார்நிலை, பெண்களின்பணியியல்சவால்கள்மற்றும்சமூக-பண்பாட்டுசூழல்கள்போன்றபல்வேறுகோணங்களில்மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளின்மூலம், இவ்வாய்விற்குத்தேவையானஅடிப்படைக்கருத்துக்கள், கோட்பாடுகள்மற்றும்அனுபவத்தரவுகள்கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும், கிடைக்கப்பெற்றஆய்வுக்கட்டுரைகளைமுறையாகபகுப்பாய்வுக்குட்படுத்தியபோது, சம்மாந்துறைப்பிரதேசத்தைச்சார்ந்தோஅல்லதுஇலங்கையின்குறிப்பிட்டமுஸ்லிம்சமூகச்சூழலில்சுகாதாரசேவைநிலையங்களில்பணியாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்கள்எதிர்நோக்கும்சவால்களைமையமாகக்கொண்டஆய்வுகளோகுறிப்பிடத்தக்கஅளவில்இடம்பெறவில்லைஎன்பதுதெளிவாகிறது. குறிப்பாக, பண்பாட்டு, மதமற்றும்குடும்பச்சூழல்களுடன்தொடர்புடையஅவர்களின்தொழில்சார்அனுபவங்களைஆழமாகஆராய்ந்தஆய்வுகள்இலக்கியங்களில்குறைவாகவேகாணப்படுகின்றன. இதன்மூலம், ஆய்வுப்பிரதேசத்திலும்குறிப்பிட்டசமூகக்குழுவினையும்மையமாகக்கொண்டஆய்வுவெற்றிடம்ஒன்றுகாணப்படுவதாகஇவ்விலக்கியமீளாய்வுசுட்டிக்காட்டுகிறது.

இவ்வெற்றிடத்தைநிரப்பும்நோக்கில்மேற்கொள்ளப்படும்இவ்வாய்வு, சுகாதாரத்துறையிலானசமூகஆய்வுகளுக்கும், குறிப்பாகமுஸ்லிம்பெண்தாதியர்களைமையமாகக்கொண்டகல்விஇலக்கியத்திற்கும்புதியபங்களிப்பைவழங்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

சிறுபான்மைச்சூழலில்முஸ்லிம்பெண்கள்தாதியர்களாகபணிபுரிதல்:

ஓர்இஸ்லாமியசட்டவியல்பகுப்பாய்வுஎன்றஇவ்வாய்வு, முஸ்லிம்பெண்தாதியர்களின்சுகாதாரச்சேவையைஇஸ்லாமியக்கண்ணோட்டத்தில்ஆராயும்நோக்குடன்மேற்கொள்ளப்படுகின்றது. தாதியர்தொழில்உலகளாவியரீதியில்மிகப்பழமைவாய்ந்ததும், மனிதாபிமானமும்புனிதத்தன்மையும்கொண்டதொழிலாகக்கருதப்பட்டுவருகின்றது. இஸ்லாமியச்சட்டவியல்பார்வையில், மருத்துவமற்றும்தாதியர்சேவைகள்சமுதாயத்திற்குஅத்தியாவசியமானவைஎன்பதால்அவைபர்ள்கிபாயாஎனவகைப்படுத்தப்படுகின்றன. மேற்படிஇவ்வாய்வு, குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமியஅறிஞர்களின்சட்டத்தீர்ப்புகள்மற்றும்இஸ்லாமியசட்டக்கோட்பாடுகள்ஆகியவற்றைஅடிப்படையாகக்கொண்டு, முஸ்லிம்பெண்தாதியர்கள்தங்கள்தொழில்சார்சேவையில்எதிர்கொள்ளும்மத, பண்பாட்டுமற்றும்ஒழுக்கச்சவால்களைஆய்வுசெய்கிறது. அதனுடன், சிறுபான்மைச்சூழலில்செயல்படும்சுகாதாரசேவைநிலையங்களில்முஸ்லிம்பெண்தாதியர்கள்கடைப்பிடிக்கவேண்டியஇஸ்லாமியஒழுக்கநெறிமுறைகள்மற்றும்நடைமுறைசார்அம்சங்களையும்இவ்வாய்வுவழிகாட்டுகிறது. இதன்மூலம், முஸ்லிம்பெண்தாதியர்கள்தமதுமதஅடையாளத்தைப்பேணியவாறேசமூகத்திற்குத்தேவையானசுகாதாரச்சேவைகளைவழங்குவதற்கானதெளிவானஇஸ்லாமியசட்டவியல்கட்டமைப்பைஇவ்வாய்வுமுன்வைக்கிறது. ஆகவே, இவ்வாய்வுகல்வியியல்முக்கியத்துவத்தையும்சமூகப்பயனையும்ஒருங்கேகொண்டதாகஅமைகிறது(Suhaima et al.,2022).

‘நவீனமருத்துவஅறிவியலில்முஸ்லிம்களின்பங்களிப்பு’ எனும்கட்டுரை, முஸ்லிம்களின்பொற்காலத்தில்மேற்கொள்ளப்பட்டஅறிவியல்மற்றும்மருத்துவஆராய்ச்சிகளுக்கும், இன்றையநவீனமருத்துவஆராய்ச்சிகளுக்கும்இடையிலானவரலாற்றுத்தொடர்ச்சியையும்அறிவியல்தொடர்புகளையும்தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக, மருத்துவஅறிவியலின்வளர்ச்சியில்முஸ்லிம்அறிஞர்கள்வழங்கியபங்களிப்புகள்இவ்வாக்கத்தில்விரிவாகஎடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், இக்கட்டுரைமுஸ்லிம்பெண்தாதியர்களின்சேவைகளின்சமூகமற்றும்மருத்துவமுக்கியத்துவத்தைசுட்டிக்காட்டினாலும், ஆய்வாளர்களின்ஆய்வுத்தலைப்பான “சேவைநிலையங்களில்முஸ்லிம்பெண்தாதியர்கள்எதிர்நோக்கும்சவால்கள்” என்றகோணத்தில், அவர்கள்தொழில்சார், சமூக, பண்பாட்டுஅல்லதுமதரீதியானசவால்களைப்பற்றியஆழமானபகுப்பாய்வுஇடம்பெறவில்லை. இவ்வாறு, பெண்தாதியர்களின்பங்களிப்பைமட்டும்எடுத்துரைத்து, அவர்கள்எதிர்கொள்ளும்சவால்களைஆய்வுக்குட்படுத்தாதது, இவ்வாய்வுத்துறையில்காணப்படும்ஒருமுக்கியமானஆய்வுத்இடைவெளியைவெளிப்படுத்துகிறது. இதன்அடிப்படையில், முஸ்லிம்பெண்தாதியர்கள்எதிர்நோக்கும்சவால்களைமையமாகக்கொண்டுமேற்கொள்ளப்படும்இவ்வாய்வு,

முன்னர்மேற்கொள்ளப்பட்டஆய்வுகளிலிருந்துவேறுபட்டு, புதியஅறிவியல்பங்களிப்பைவழங்கும்தன்மையுடையதாகஅமைகிறது.

'Female Muslim working as a nurse in Singapore' எனும்ஆய்வு, சிங்கப்பூர்சமூகச்சூழலில்முஸ்லிம்பெண்தாதியர்கள்தங்கள்தொழில்முறைபணிகளில்ஹிஜாப்அணிவதில்ஏற்பட்டுள்ளகட்டுப்பாடுகள்காரணமாகஎதிர்நோக்கும்மதமற்றும்ஒழுக்கச்சவால்களைவெளிப்படுத்துகிறது. குறிப்பாக, சுகாதாரசேவைநிலையங்களில்ஹிஜாப்அணியஅனுமதிஇல்லாதசூழ்நிலைகாரணமாக, சிலமுஸ்லிம்பெண்தாதியர்கள்தாதியர்தொழிலைமதரீதியாகஏற்றுக்கொள்ளமுடியாததாககருதுகின்றநிலைமைஇவ்வாய்வில்சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும், இச்சூழ்நிலையின்தாக்கமாக, சிங்கப்பூரில்உள்ளபலமுஸ்லிம்பெற்றோர்கள்ஹிஜாப்அணியமுடியாதகாரணத்தினால்தங்கள்மகள்களுக்குதாதியர்தொழிலைமேற்கொள்வதற்குஅனுமதிவழங்கமறுப்பதாகவும்இவ்வாய்வுகுறிப்பிடுகிறது. எனினும், இவ்வாய்வுசிங்கப்பூர்சூழலில்முஸ்லிம்பெண்தாதியர்கள்ஹிஜாப்தொடர்பாகஎதிர்கொள்ளும்சவால்களைமட்டும்மையமாகக்கொண்டுள்ளது(Hassan, 2020).

"வைத்தியர்களின்உதவியாளர்கள்தாதியர்கள்என்பதுபழையகோட்பாடு" எனும்கட்டுரை, தாதியர்தொழிலின்பாரம்பரியவரையறைகளையும்அதில்ஏற்பட்டுள்ளகருத்தியல்மாற்றங்களையும்விளக்குகிறது. இக்கட்டுரையில்தாதியர்களின்வரைவிலக்கணம், தாதியசேவையின்சமூகமற்றும்மருத்துவமுக்கியத்துவம், பெண்தாதியர்கள்இத்துறையில்இணைக்கப்படும்விதம், அவர்களுக்கானகற்கைநெறிகள்மற்றும்பயிற்சிமுறைகள்ஆகியவைவிரிவாகஎடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனினும், இக்கட்டுரைதாதியர்தொழிலின்பொதுவானகோட்பாடுமற்றும்கட்டமைப்புஅம்சங்களைமட்டும்கவனத்தில்எடுத்துள்ளதோடு, சுகாதாரசேவைநிலையங்களில்பணியாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்கள்எதிர்நோக்கும்மத, பண்பாட்டு, சமூகஅல்லதுதொழில்சார்சவால்களைப்பற்றிஎந்தவிதமானஆழமானவிவாதத்தையும்முன்வைக்கவில்லை(Riyas, 2016).

'சர்வதேசதாதியர்தினம்' எனும்கட்டுரை, சர்வதேசதாதியர்தினத்தின்பின்னணியையும், அந்நாளில்தாதியர்களைகண்ணியப்படுத்துவதன்அவசியத்தையும்விளக்குகிறது. மேலும், நாட்டின்சுகாதாரத்துறையின்வளர்ச்சியில்தாதியர்கள்வழங்கும்பங்களிப்பு, தாதியர்தொழிலின்தோற்றம்மற்றும்அதன்வரலாற்றுவளர்ச்சிஆகியஅம்சங்களையும்இக்கட்டுரைஎடுத்துரைக்கிறது. எனினும், இக்கட்டுரைதாதியர்தொழிலின்பொதுவானசமூகமற்றும்வரலாற்றுப்பரிமாணங்களைமட்டும்கவனத்தில்எடுத்துள்ளதோடு, முஸ்லிம்பெண்தாதியர்கள்பற்றியோ, அவர்கள்சுகாதாரசேவைநிலையங்களில்பணியாற்றும்போதுஎதிர்நோக்கும்மத, பண்பாட்டு, சமூகஅல்லதுதொழில்சார்சவால்கள்பற்றியோஎந்தவிதமானகுறிப்பையும்வழங்கவில்லை. இவ்வாறு, குறிப்பிட்டசமூகக்குழுவைமையமாகக்கொண்டஆய்வுஇல்லாமை, இவ்வாய்வுத்துறையில்காணப்படும்ஒருமுக்கியமானஆய்வுத்இடைவெளியைதெளிவாகஎடுத்துக்காட்டுகிறது(Punniyamin, 2009).

**ஆய்வுமுறையியல்**

இவ்வாய்வுபண்புசார்,(Qualitative)அளவுசார்(Quantitative)அணுகுமுறைகளைஒருங்கிணைத்தகலப்புஆய்வுமுறையில்(Mixed Method Approach)மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2025, IRJTSR

முதன்மைத்தரவுகள்முறையாகத்தயாரிக்கப்பட்டவினாக்கொத்துக்கள்மூலம்திரட்டப்பட்டன. இவ்வினாக்கொத்துக்கள், எழுமாறாகத்தெரிவுசெய்யப்பட்ட 30 முஸ்லிம்பெண்தாதியர்களுக்குவழங்கப்பட்டு, அவர்களிடமிருந்துதகவல்கள்சேகரிக்கப்பட்டன. மேலும், ஆய்வுத்தகவல்களைஆழமாகப்புரிந்துகொள்ளும்நோக்கில் 10 முஸ்லிம்பெண்தாதியர்களிடம் நேர்காணல்மேற்கொள்ளப்பட்டது.இந்நேர்காணல்கள், தாதியர்கள்எதிர்நோக்கும்அனுபவங்கள், சவால்கள்மற்றும்அவர்களின்பார்வைகள்குறித்துதகவல்களைவழங்கின. வினாக்கொத்துக்கள்மூலம்பெறப்பட்டஅளவுசார்தரவுகள், Excelமென்பொருள்ஊடாகபகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன. அதேவேளை, நேர்காணல்கள்மற்றும்திறந்தவினாக்கள்மூலம்கிடைத்தபண்புசார்தரவுகள், கருப்பொருள்பகுப்பாய்வு(Thematic Analysis)முறையைப்பயன்படுத்திஆய்வுசெய்யப்பட்டன. மேலும், ஆய்வின்கோட்பாட்டுமற்றும்இலக்கியஅடித்தளத்தைவலுப்படுத்துவதற்காக, இரண்டாம்நிலைத்தரவுகளாகஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்மற்றும்இணையஆக்கங்கள்ஆகியவைபயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும்பிரதானகண்டறிதல்களும்**

ஆய்வுப்பிரதேசத்தில்கடமையாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்களின்கல்வித்தகைமைகள்தொடர்பாகமேற்கொள்ளப்பட்டபகுப்பாய்வின்அடிப்படையில், அவர்களிடையேகல்விவளர்ச்சிநிலைகுறிப்பிடத்தக்கஅளவில்காணப்படுகின்றது. குறிப்பாக, ஆய்வில்பங்கேற்றவர்களில்பெரும்பாலானோர்தேசியடிப்ளோமாகற்கையைப்பூர்த்திசெய்தவர்களாகஉள்ளனர். இதனைத்தொடர்ந்து, பி.எஸ்.ஸி (தாதி) பட்டம்பெற்றவர்கள்இரண்டாம்நிலையாகவும், அதற்குஅடுத்தநிலையில்உயர்தேசியடிப்ளோமாபெற்றதாதியர்களும்காணப்படுகின்றனர். இக்கண்டறிதல்கள், ஆய்வுப்பிரதேசத்தில்முஸ்லிம்பெண்தாதியர்கள்தமதுதொழில்முறைதிறன்களைமேம்படுத்துவதில்அதிகஆர்வம்காட்டிவருகின்றனர்என்பதையும், உயர்கல்வியைநோக்கிமுன்னேறும்ஒருசாதகமானபோக்கையும்வெளிப்படுத்துகின்றன. இக்கல்விமுன்னேற்றம், அவர்களின்சேவைத்தரம், தொழில்சார்தன்னம்பிக்கைமற்றும்சுகாதாரத்துறையின்செயல்திறன்ஆகியவற்றில்நேர்மறையானதாக்கத்தைஏற்படுத்தும்எனக்கருதப்படுகிறது. இத்தகவல்களைத்தெளிவாகப்புரிந்துகொள்ள, கீழேவழங்கப்படும்வரைபடம்முஸ்லிம்பெண்தாதியர்களின்கல்வித்தகைமைகளின்பகிர்வைகாட்சிப்படுத்துகிறது.




**ஆடைஅமைப்பு**


© 2025, IRJTSR

இஸ்லாமியஒழுக்கக்கோணத்தில், பெண்கள்ஹிஜாப்அணிவதுவலியுறுத்தப்பட்டுள்ளதோடு, பெண்களின்ஆடைஅமைப்புபண்பாடுமற்றும்மரியாதையைபிரதிபலிக்கும்முக்கியஅம்சமாகக்கருதப்படுகிறது. குறிப்பாக, அல்குர்ஆனில்பெண்கள்முகம்மற்றும்இருமணிக்கட்டுகளைத்தவிரஉடலின்ஏனையபகுதிகளைமறைக்கும்வகையில் ஆடைஅணியவேண்டும்எனஅறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வறிவுறுத்தல்பெண்களின்கண்ணியம், பாதுகாப்பு, சமூகஒழுக்கத்தைபேணும்நோக்கில்முன்வைக்கப்பட்டதாகஇஸ்லாமியஅறிஞர்கள்விளக்குகின்றனர். எனினும், ஆய்வுப்பிரதேசத்தில்அமைந்துள்ளசுகாதாரசேவைநிலையங்களில்பணியாற்றும்முஸ்லிம்பெண்தாதியர்களிடையே மேற்கொள்ளப்பட்டஆய்வின்அடிப்படையில், பெரும்பாலானோர்தங்களதுபணியிடச்சூழலில்இஸ்லாமியவரையறைகளுக்குட்பட்டஆடைகளைஅணியவசதிஅல்லதுஅனுமதிபோதியளவில்இல்லைஎனக்கருத்துத்தெரிவிக்கின்றனர். குறிப்பாக, ஆய்வில்பங்கேற்றவர்களில் 85.7%முஸ்லிம்பெண்தாதியர்கள், தாதியர்தொழிலுக்கானஉத்தியோகபூர்வஆடைவிதிமுறைகள்இஸ்லாமியஆடைச்சட்டங்களுடன்முழுமையாகஒத்துப்போவதில்லைஎனக்கருதுகின்றனர். இக்கண்டறிதல், முஸ்லிம்பெண்தாதியர்கள்தமதுமதஅடையாளத்தையும்தொழில்முறைகடமைகளையும்ஒருங்கிணைப்பதில்எதிர்நோக்கும்ஒருமுக்கியமானசவாலைக்காட்டுகிறது. எனவே, சுகாதாரசேவைநிலையங்களில்பணியிடஒழுங்குமுறைகளைமதமற்றும்பண்பாட்டுபன்மைஉணர்வுடன்மறுசீரமைப்பதுஅவசியம்என்பதையும்இவ்வாய்வுசுட்டிக்காட்டுகிறது.

**கணவன் - பிள்ளைகளுக்கானகடமைகளை நிறைவேற்றல்**

சுகாதாரசேவைகள்ஒருஅத்தியாவசியச்சேவையாகக்கருதப்படுவதன்காரணமாகதாதியர்கள்இரவுநேரங்களிலும்கடமையாற்றவேண்டியநிர்ப்பந்தம்உள்ளது. இதுமுஸ்லிம்பெண்தாதியர்களின்குடும்பவாழ்வில்குறிப்பிடத்தக்கதாக்கங்களைஏற்படுத்துவதாகஆய்வுவெளிப்படுத்துகிறது. குறிப்பாக, இரவுநேரப்பணிகாரணமாககணவன், பிள்ளைகளுக்குச்செய்யவேண்டியகுடும்பம்சார்ந்தகடமைகளில்குறைவுநிலைஉருவாகியுள்ளது. உணவுதயாரித்தல், பிள்ளைகளின்கல்விநடவடிக்கைகளில்கவனம்செலுத்தல், பிள்ளைகளின்பாதுகாப்புமற்றும்பராமரிப்புபோன்றஅடிப்படைகுடும்பப்பொறுப்புகள்பாதிக்கப்படுவதாகபலர்கருத்துத்தெரிவித்துள்ளனர். இக்கண்டறிதல்கள், தொழில்சார்கடமைகளுக்கும்குடும்பப்பொறுப்புகளுக்கும்இடையேசமநிலையைப்பேணுவதில்அவர்கள்எதிர்நோக்கும்ஒருமுக்கியமானசவாலாகக்காணப்படுகின்றது. ஆகவே, பணிநேரஒழுங்கமைப்பில்குடும்பநேயமானகொள்கைகள்உருவாக்குதல்அவசியம்என்பதையும்இவ்வாய்வுசுட்டிக்காட்டுகிறது.

**பிள்ளைபராமரிப்புமற்றும்கல்விநடவடிக்கைகளைக்கண்காணித்தல்**

ஆய்வின்அடிப்படையில், தாதியர்கள்தமதுபிள்ளைகளைப்பராமரிப்பதற்கும், கல்விநடவடிக்கைகளைக்கண்காணிப்பதற்கும்போதியளவானநேரத்தைவழங்கமுடியாமல்இருப்பதாகக்கண்டறியப்பட்டுள்ளது. இதன்விளைவாக, பிள்ளைகளின்கற்றல்திறனிலும்கல்விமுன்னேற்றத்திலும்பின்னடைவுஏற்படும்அபாயம்ஏற்பட்டுள்ளது. ஆய்வில்பங்கேற்ற 57.5%தாதியர்கள், ஒருநாளைக்கு 4–6 மணித்தியாலங்கள்மட்டுமேபிள்ளைகளுக்கானபராமரிப்புமற்றும்கல்விநடவடிக்கைகளுக்குவழங்குகிறார்கள்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2025, IRJTSR 

25%தாதியர்கள், மிகக்குறைந்த 1–3 மணித்தியாலங்கள்மட்டுமேசெலவிடுகிறார்கள்என்றுதெரிவித்துள்ளனர். 17.5%தாதியர்கள், 7–10 மணித்தியாலங்கள்செலவிடுகின்றனர்;. இருப்பினும், அவர்களுக்கேதங்கள்பிள்ளைகளுக்குபோதுமானநேரத்தைவழங்கமுடியாதநிலைஉள்ளதுஎன்றுகுறிப்பிடுகின்றனர். மேலும், 33.3%தாதியர்கள்தங்கள்பிள்ளைகளைபிறஉறவினர்களிடம்பொறுப்பாக்கிச்செல்வதால், குடும்பபராமரிப்பில்சிக்கல்நிலைஉருவாகியுள்ளது. இந்தக்கண்டறிதல்கள், பணிநேரஒழுங்கமைப்புமற்றும்குடும்பப்பொறுப்புகளின்மோதல்காரணமாகமுஸ்லிம்பெண்தாதியர்கள்எதிர்நோக்கும்முக்கியமானசமூகசவால்களைவெளிப்படுத்துகின்றன. இதன்அடிப்படையில், சுகாதாரசேவைநிலையங்களில்பணியிடக்கொள்கைகள்மற்றும்குடும்பஆதரவுஅமைப்புகளைமேம்படுத்துதல்அவசியம்எனக்குறிப்பிடப்படுகிறது.

**விடுமுறை**

பெருநாள்விடுமுறைகள், பொதுவிடுமுறைநாட்களிலும்தாதியர்கள்கடமைக்குச்செல்லவேண்டியுள்ளது. இதனால்தமதுசொந்ததேவைகள், குடும்பப்பொறுப்புகளைநிறைவேற்றமுடியாமல்உள்ளன. இதன்விளைவாக, அவர்கள்தங்கள்தனிப்பட்டதேவைகள்,
குடும்பச்செயல்பாடுகள்மற்றும்சுயபராமரிப்புஆகியவற்றில்குறைவுநிலையைஎதிர்கொள்கின்றனர். ஆகவே, பண்டிகைமற்றும்பொதுவிடுமுறைநாட்களில்தாதியர்களின்கடமைகளைசீரமைத்துக்கொள்ளும்வகையில்மனிதவளஆதரவுமற்றும்பணிநேரதிட்டமிடல்கொள்கைகள்உருவாக்கப்படுவதுஅவசியம்எனக்குறிப்பிடப்படுகிறது.

**வணக்கவழிகாடுகள்**

ஆய்வின்படி,
முஸ்லிம்பெண்தாதியர்கள்நோன்புகாலங்களில்கடமையாற்றவேண்டியசூழ்நிலையைஎதிர்கொள்வதால்அல்குர்ஆன்ஓதுவதற்கும்,இரவுவணக்கங்களைமுறையாகநிறைவேற்றுவதற்கும் முடியாமல்இருப்பதாகக்குறிப்பிடுகின்றனர். குறிப்பாகபணிநேரஒழுங்குகள்காரணமாக,
பெருநாள்தினங்களிலும்அரைத்தியாலமாவதுகடமைக்குச்செல்லவேண்டியுள்ளது. மேலும், ஐங்காலதொழுகைகளைஉரியநேரத்தில்தொழமுடியாதசூழ்நிலையும்காணப்படுகின்றது. இதன்விளைவாக, முஸ்லிம்பெண்தாதியர்கள்தங்கள்இஸ்லாமியவழிபாட்டுகடமைகளையும்தொழில்முறைகடமைகளையும்சமநிலைப்படுத்துவதில்சவால்களைஎதிர்கொள்கின்றனர். இந்தக்கண்டறிதல், பணிநேரஒழுங்கமைப்பில்மதக்கடமைகள்மற்றும்தொழில்பொறுப்புகளுக்குஇடையேயானமுரண்பாடுகளைவெளிப்படுத்துகிறது. எனவே, சுகாதாரசேவைநிலையங்களில்பணிநேரதிட்டமிடல்மற்றும்மதகடமைகளுக்கானஆதரவுக்கட்டமைப்புகளைஉருவாக்குவதுஅவசியமாகும்.

**போக்குவரத்து**

ஆய்வின்படி,
முஸ்லிம்பெண்தாதியர்கள்சேவைநிலையங்களுக்குநேரத்திற்குவருவதில்சிலசவால்களைஎதிர்கொள்கின்றனர். குறிப்பாக 12.8%தாதியர்களின்கணவன்மார்கள்வெளிநாடுகளில்தொழில்புரிவதால், அவர்களைசேவைநிலையங்களுக்குநேரத்திற்குள்செல்வதில்சிரமங்கள்ஏற்படுகின்றன.பெரும்பாலானதாதியர்கள் பொதுப்போக்குவரத்தைபயன்படுத்துவதால்,
சிலசமயங்களில்கடமைக்குசெல்லதாமதம்ஏற்படுவதும்கண்டறியப்பட்டுள்ளது. இதனால்,

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

9.5%தாதியர்கள்சேவைநிலையத்தின்உயர்அதிகாரியால்தண்டனைபெற்றுள்ளதாகவும்ஆய்வுத்தகவல்கள்வெளிப்படுத்துகின்றன. இந்தக்கண்டறிதல்கள், முஸ்லிம்பெண்தாதியர்களின்பணிநேரஒழுங்கமைப்புமற்றும்சேவைநிலைத்தன்மைமீதுநேர்மறையல்லாததாக்கங்களைஏற்படுத்துகிறது. எனவே, சேவைநிலையங்களில்போக்குவரத்துவசதி, வேலைநேரஒழுங்கமைப்புஆகியவற்றைமேம்படுத்துவதுஅவசியமாகும்.

**நோயாளர்களைப்பராமரித்தல்**

7.1%தாதியர்கள், நோயாளிகளைப்பராமரிக்கும்சந்தர்ப்பங்களில்நோயாளிகளிடமிருந்தும், அவர்களின்உறவினர்களிடமிருந்தும்சிக்கல்களைஎதிர்கொள்கின்றனர். குறிப்பாக, நோயாளர்களின்மாத்திரைகளைஎடுத்துக்கொள்ளுதல், ஆலோசனைகளைவழங்குதல்போன்றமருத்துவநடவடிக்கைகளில்பிற்போக்குத்தன்மையும்அத்தோடுவழிகாட்டுதலைமுறையாககடைப்பிடிக்குமாறுவலியுறுத்தும்போதுஏற்படும்வாதங்களும் தாதியர்களைப்பாதிக்கின்றன. மேலும், நோயாளிகளின்உறவினர்கள்தங்கள்எதிர்பார்ப்புகளைபூர்த்திசெய்யாதபோதுஅல்லதுபணியிடஒழுங்குக்குஇடையூறுவிளைவிக்கும்சந்தர்ப்பங்களில், இருதரப்பினர்களுக்கும்இடையேமுரண்பாட்டுநிலைஉருவாகுகின்றது. இதன்விளைவாக, முஸ்லிம்பெண்தாதியர்கள்நோயாளர்களைப்பராமரிக்கும்பொறுப்பில்மனஅழுத்தம்மற்றும்சிக்கல்களைஎதிர்கொள்கின்றனர். இந்தக்கண்டறிதல்கள், சுகாதாரசேவைதரம், நோயாளி–பார்வையாளர்உறவுகளின்ஒழுங்குமற்றும்பணியாளர்களின்நலன்ஆகியவற்றின்மேம்பாட்டிற்குதேவையானநடைமுறைதீர்வுகளின்அவசியத்தைக்காட்டுகின்றன.

**பரிந்துரைகள்**

- முஸ்லிம்பெண்தாதியர்களுக்குஅவர்களதுசேவை, இஸ்லாமியமார்க்கவரையறைக்குட்பட்டவகையில்அவர்களதுசீருடையைஅமைத்துக்கொடுப்பதில்அரசாங்கம்கவனம்செலுத்தவேண்டும்.
- முஸ்லிம்தாதியர்களின்இரவுநேரபணிக்காகஆண்தாதியர்கள், திருமணமாகாதபெண்தாதியர்கள்மேலும்விருப்பமுள்ளதிருமணமுடித்தபெண்தாதியர்கள்ஆகியோர்களின்சேவையைப்பெற்றுக்கொள்வதன்மூலம்திருமணம்முடித்தமுஸ்லிம்பெண்தாதியர்கள்தமதுகுடும்பவாழ்க்கையில்கவனம்செலுத்தமுடியும்.
- முஸ்லிம்பெண்தாதியர்களின்பண்டிகைநாள்விடுமுறைமற்றும்தனிப்பட்டசுகவீனவிடுமுறை, ரமழான்காலவிடுமுறைகள்என்பவற்றில்சற்றுகவனம்செலுத்தப்படவேண்டும்.
- பெண்தாதியர்கள்என்றவகையில்அவர்களதுசுயவிடுமுறைகளின்கவனம்செலுத்துவதுஅவர்களுக்குஏற்படக்கூடியஉளரீதியானபாதிப்புகளைக்குறைக்கும்.
- நோயாளர்கள்தாதியர்களதுஆலோசனைகள்ஏற்றுநடப்பதன்மூலம்முரண்பாடுகளைதவிர்த்துக்கொள்ளமுடியும். மேலும்தேவையற்றநபர்களுக்கும்தாதியர்களுக்குமிடையிலானதொடர்புகளைக்குறைத்தல்.

***முடிவுரை***

*சுகாதாரசேவைபண்டைக்காலம்தொடங்கிஇன்றுவரைமகத்தானசமூகப்பங்களிப்பாகஇயங்கிவருகிறது. இதில்தாதியர்களின்பங்களிப்புமிகமுக்கியமானதாகும். இஸ்லாம்பெண்களின்பாதுகாப்பு, நலன்ஆகியவற்றில்அதிககவனம்செலுத்தி, அதற்கானவரையறைகளையும்ஒழுங்குகளையும்முறையாகவழங்கியுள்ளது. இத்தகையஇஸ்லாமியக்கட்டளைகள், முஸ்லிம்பெண்கள்சேவைபுரியும்சுகாதாரநிறுவனங்களிலும்கடைபிடிக்கப்படவேண்டியதுகாலத்தின்தேவையாகும். அதற்காக, இந்தத்துறையுடன்தொடர்புடையஅனைவரும்ஆதரவளிப்பதுபோற்றத்தக்கது. சுகாதாரநிறுவனங்களில்தாதியர்களாகபணியாற்றும்முஸ்லிம்பெண்கள், குடும்பபொறுப்புகளையும்தொழில்முறைகடமைகளையும்ஒரேசமநிலையில்கொண்டுசெல்லமுயற்சிக்கின்றனர். ஆய்வின்அடிப்படையில், அவர்கள்பலவிதமானசமூக, குடும்பமற்றும்தொழில்சார்சவால்களைஎதிர்கொள்வதாகத்தெளிவாகக்கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வு, குறிப்பாகமுஸ்லிம்பெண்தாதியர்கள்சேவைநிலையங்களில்எதிர்நோக்கும்சவால்களைஅடையாளம்காண்பதில்உதவுவதோடு, அதற்கானபரிந்துரைகளையும்முன்வைக்கிறது. மேலும், எதிர்காலத்தில்இதுதொடர்பாகஆய்வைமேற்கொள்ளும்ஆய்வாளர்களுக்குவழிகாட்டும்ஆதாரமாகவும்இதுஅமைகிறது.*

## References


[1] Hassan, M. H. (2020). *Female Muslim working as a nurse in Singapore.* Haniff. SG. http://haniff.sg/en/short-articles/article-female-muslim-working-as-a-nurse-in-singapore/

[2] Neeyindri amayathu ulahu [The world cannot survive without you]. (2016, May 12). [Video]. Puthiya Thalaimurai TV. https://www.youtube.com/watch?v=8YhpfciovdE

[3] Puniyameen. (2009). *Sarvathesa thathiyar thinam [International Nurses Day]*. Oneindia Tamil.https://tamil.oneindia.com/cj/puniyameen/2009/0512-international-nurses-day.html

[4] Riyas, J.M.M. (2016). *Vaiththiyarhalin uthaviyalarhale thathiyar enbathu palaya karuthukol [Nurses are the old term for doctors' assistants]*.http:// www.battinews.com / 2016/01/nurse.html

[5] Suhaima, M.R.J., Mazahir, S.M.M., & Abdullah, M.M.A. (2022). *Sirupanmai soolamaivil Muslim pengal thathiyarhalaha pani purithal: Oor islamiya sattaviyal pahuppaivu [Muslim women's employment as nurses in the modern health sector: A study based on urban Islamic society]*. Malaysian Journal of Social Sciences and Humanities (MJSSH), 7(3), e001317. https://doi.org/10.47405/mjssh.v7i3.1317

[6] Team, I. (2023). *15 challenges of being a nurse and how to overcome them.* Indeed. https://www.indeed.com/career-advice/career-development/challenges-as-a-nurse

[7] Thoothu. (2018, January 21). *Navēna maruthuva ariviyal- Muslimgalin pangalipu [Modern medical science - Muslims' contribution].* http:// thoothu 2018. blogspot. com/ 2019/01/blog-post_21.html?m=1